**Publication: Tamil Murasu, Pg 1**
**Date: 15 October 2024**
**Headline: Achievement awards for Justice Judith Prakash, athlete Shanti Pereira**

# நீதிபதி ஜூடித் பிரகாஷ், திடல்தட வீராங்கனை சாந்தி பெரேராவிற்கு சாதனை விருதுகள்

**யோகிதா அன்புச்செழியன்**

தலைசிறந்து விளங்கும் பெண்களைச் சிறப்பிக்க 'ஹெர் வோர்ல்டு' மாத இதழ் ஆண்டுதோறும் வழங்கும் உயரிய விருதுகளைத் தங்கள் துறைகளில் அழியாதத் தடம் பதித்துள்ள இரு பெண்கள் பெற்றுள்ளனர்.

சிங்கப்பூர் நீதித்துறையின் முன்னோடியான நீதிபதி ஜூடித் பிரகாஷ், 2024ஆம் ஆண்டிற்கான 'ஹெர் வோர்ல்டு' சிறந்த பெண்மணி விருதைப் பெற்றார்.

திடல்தட நட்சத்திர விளையாட்டாளர் சாந்தி பெரேரா, சிறப்பான தடகளச் சாதனைகளுக்காக 2024ஆம் ஆண்டின் 'ஹெர் வோர்ல்டு' இளம் பெண் சாதனையாளர் விருதைப் பெற்றார்.

அதிபர் தர்மன் சண்முகரத்னத்தின் துணைவியார் ஜேன் இத்தோகி ஜேடபிள்யூ மரியட் ஹோட்டல் சிங்கப்பூர் சவுத் பீச்சில், திங்கட்கிழமை (அக்டோபர் 14), நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு விருதுகளை வழங்கினார்.

1991ல் தொடங்கப்பட்ட இவ்விருது, தொழில் அல்லது துறையின்வழி சமூகத்திற்குச் சிறந்த பங்களிப்புகளை ஆற்றும் பெண்களைக் கௌரவிக்கிறது.

நீதிபதி ஜூடித் பிரகாஷ், 72, சிங்கப்பூரின் முதல் பெண் மேல்முறையீட்டு நீதிபதி (Judge of Appeal) ஆவார். 30 ஆண்டுகளுக்கும் மேலாக நீதிமன்றத்தில் பல்வேறு பதவிகளில் சேவையாற்றிய இவர், ஏறக்குறைய 645 தீர்ப்புகளை வழங்கியுள்ளார்.

"எனது வாழ்க்கையை வளமாக்கிய பணிக்காக இந்த விருதைப் பெறுவதில் பெருமிதம் கொள்கிறேன். இப்பணி எனது சிந்தனைக்கு ஒரு சவாலாக அமைந்ததோடு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் சிங்கப்பூரின் சட்டத்துறை வளர்ச்சியில் பங்களிக்கவும் பல வாய்ப்புகளை அளித்துள்ளது," என்று அவர் கூறினார்.

சிங்கப்பூரின் மிக வேகமான பெண் என்று கொண்டாடப்படும் குமாரி சாந்தி பெரேரா, 28 வயதில், அனைத்துலக அளவில் பல பதக்கங்களை வென்றதுடன் பல தேசிய சாதனைகளையும் படைத்துள்ளார்.

"மற்ற இளம்பெண்கள் தங்கள் கனவுகளை நனவாக்க விடாமுயற்சியுடன் செயல்பட எனது பயணம் ஊக்கம் அளிக்கும் என்று நம்புகிறேன். ஒருவர் எதைச் சாதிக்க முடியும், முடியாது என்பதை வேறு யாராலும் கட்டுப்படுத்தவோ தீர்மானிக்கவோ முடியாது," என்று குமாரி சாந்தி பெரேரா கூறினார்.

yogitaa@sph.com.sg



சிறப்பு விருந்தினரான அதிபர் தர்மன் சண்முகரத்னத்தின் துணைவியார் ஜேன் இத்தோகியிடமிருந்து 'ஹெர் வோர்ல்டு' சிறந்த பெண்மணி விருதைப் பெறும் திருவாட்டி ஜூடித் பிரகாஷ்.



இடமிருந்து எஸ்பிஎச் மீடியா தலைமை செயல்பாட்டு அதிகாரி திருவாட்டி லோ யு யிங், இளம்பெண் சாதனையாளர் விருது வென்ற திருவாட்டி சாந்தி பெரேரா, ஹெர் வோர்ல்டு தலைமை ஆசிரியர் திருவாட்டி எலிசபெத் லீ.

**படங்கள்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

60 காசு

தமிழ் முரசு சந்தாவுக்கு அழைக்கவும்: 6388-3838